# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 41. அஞ்சல் சேவைகள்

**விளக்கம்** – இதில் அஞ்சல் திணைக்களத்தின் அஞ்சல் பணிஞர்களும், தூதஞ்சல் சேவைகளின் முகவர்களும் (agents of courier services) அடங்குவர்.

**பிரத்தியேக தகவல்கள் /வழிகாட்டல்கள்**

**அஞ்சல் பணிஞர் (Post man) / விநியோக முகவர்**

- எப்போதும் முகக்கவசம் ஒன்றினை அணிந்து கொள்ளுங்கள். வியர்வையால் முகக்கவசம் நனைந்துபோகும் சந்தர்ப்பங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட முகக்கவசங்களை ஒரு நாளில் அணியவேண்டி ஏற்படலாம்.
- விநியோகத்தின் போது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சம் ஒரு மீற்றர் தூரத்தினைப் பேணவும்.
- வீட்டு அழைப்பு மணிகளைத் தொடுவதைத் தவிர்க்கவும், பதிலாக உங்கள் ஈருருளியின் மணி /உந்துருளி / வாகனத்தின் ஊதொலிக் குழல் (Horn) ஒலியைப் பயன்படுத்தவும்.
- தொடர்பு இலக்கம் இருந்தால் (தூதஞ்சல் சேவை) முன்கூட்டியே நீங்கள் வரப்போவதை அறியத்தரலாம்.
- அஞ்சல் பெட்டிகள் வீட்டு வாயிலில் அல்லது படலையில் பொருத்தப்பட்டிருந்தால் கையொப்பம் பெறுவதற்கான தேவை ஏற்படாத சந்தர்ப்பங்களில் அப் பெட்டிகளில் தபால்களைப் போட்டுவிடவும். மழை பெய்யவில்லை எனில் படலையின் ஊடாக அஞ்சல்களை கவனமாக உள்ளே போடலாம்.
- கையொப்பம் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர்களை தங்கள் சொந்த எழுதுகோல்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கவும். வாடிக்கையாளருக்கு உங்கள் எழுதுகோலினை நீங்கள் வழங்கும் சந்தர்ப்பங்களில், அவர்கள் அதனை மீளக் கையளித்தவுடன் கை தூய்மிப்பான் மூலம் எழுதுகோலினைத் தொற்றுநீக்கம் செய்யுங்கள்.
- தேவைப்பட்டால் பயன்படுத்தும்பொருட்டு, கை தூய்மிப்பான் குடுவையினை உங்கள் வசம் வைத்திருங்கள்.
- முடிந்தவரை வளாகத்திற்குள் நுழைவதைத் தவிர்க்கவும். தொடர்மாடி வளாகங்களுக்கான அஞ்சல்களைக் கடமையில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் விநியோகத்திற்காக ஒப்படைக்கப்படலாம்.

**வாடிக்கையாளர்கள் / குடியிருப்பாளர்கள்**

- இயலுமாயின் வாயிலில் /படலையில் ஒரு அஞ்சல் பெட்டியைப் பொருத்தி வைக்கவும். இல்லையெனில் நேரடித் தொடர்பைக் குறைக்கும் நோக்குடன் அஞ்சல் பணிஞரை வாயில் வழியாக/படலை ஊடாக அஞ்சலை உள்ளே போடுவதற்கு ஊக்குவிக்கவும்.
- அஞ்சல்களை /பொதிகளை பெற்றுக்கொள்ளும்போது அஞ்சல் பணிஞர்கள்/ விநியோகிப்போரிடமிருந்து குறைந்தபட்சம் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணவும்.
- உங்கள் சொந்தப் பாதுகாப்பினை உறுதி செய்யும்பொருட்டுப் பதிவுசெய்யப்பட்ட அஞ்சல்/ விநியோக பொதிகளைப் பெறும் வேளைகளில் கையொப்பமிடுவதற்கு எப்போதும் உங்கள் சொந்த எழுதுகோலினைப் பயன்படுத்தவும்.
- அஞ்சல் உறைகள் மற்றும் விநியோகப் பொதிகளின் உறைகள் ஆகியவற்றை எப்போதும் வீசிவிடுவதுடன் அவற்றைக் கையாண்ட பின்னர் உங்களது கைகளைச் சவர்க்காரம் மற்றும் தண்ணீரை உபயோகித்துக் கழுவிக்கொள்ளுங்கள்.
- இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் சாதாரண அஞ்சல்களைத் தவிர்த்து மின்னஞ்சல்களைப் பயன்படுத்துங்கள்.
- அஞ்சலகத்திற்கு அடிக்கடி வருவதைத் தவிர்ப்பதற்காக, பொதுவாக உபயோகிக்கும் முத்திரைகளைக் கணிசமான அளவில் உங்கள் வீட்டில் வைத்திருக்கவும். இதன்மூலம் உங்கள் அஞ்சலை அஞ்சல் அலுவலகங்களுக்கு வெளியே உள்ள அஞ்சற்பெட்டிகளில் நேரடியாக இடலாம்.

**அஞ்சல் அலுவலகங்களில்**

- முகக்கவசங்கள் தொற்றுநீக்கிகள் போன்ற போதுமான பாதுகாப்பு சாதன வழங்கல்களை உறுதிப்படுத்துவதுடன் தேவைக்கேற்ற அளவில் ஆகக் குறைந்தபட்ச பணியாளர்கள் சேவையிலிருக்குமாறு திட்டமிடுங்கள் கையிருப்பில் இருக்க வேண்டும் (உதாரணம்: சவர்க்காரம் மற்றும், நீர் வழங்கல்).
- பணியாளர்களுக்கான மருத்துவக் கண்காணிப்புப் பொறிமுறையினை உருவாக்குவதுடன் அவர்கள் பொருத்தமான மருத்துவ ஆலோசனைனைகளைப் பெறுவதற்கான நடைமுறையினையும் ஏற்படுத்துதல்.
- அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் மேற்பரப்புகளைச் சுத்திகரித்துத் தொற்றுநீக்கம் செய்யுங்கள் (எண்ணகங்கள்/ மேசைகள் /எழுதுகோல்கள்).
- தொடுவதைக் குறைக்கவும் காற்றோட்டத்தை மேம்படுத்தவும் கதவுகளைத் (வளிப்பதனாக்கி இல்லாதவிடத்து) திறந்து வையுங்கள்.
- அனைத்து ஊழியர்களும் வாடிக்கையாளர்களும் முகக்கவசங்களை அணிய வேண்டும்.
- பொதிகளை எடை போடும் பணியில் குறித்தொதுக்கப்பட்ட பணியாளர் ஒருவரால் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும்.
- முத்திரைகள் ஒட்டுவதற்கு உதவியாக வைக்கும் ஈரமான நுரைப்பஞ்சை இனிமேல் வைக்க வேண்டாம்.
- அஞ்சலகத்தினுள் நுழையும் பொதுமக்களது எண்ணிக்கையினைக் கட்டுப்படுத்துவதன்மூலம், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அஞ்சலகத்தினுள் இருப்பவர்களது எண்ணிக்கையினை மட்டுப்படுத்தவும்.
- மக்கள் எண்ணகங்களின் முன்பாக வரிசையில் காத்திருக்கும் போது தமக்கிடையே பாதுகாப்பான இடைவெளியினை பேணவேண்டும் என்பதனை நினைவுபடுத்தும்பொருட்டு 'வரிசையில் ஒரு மீற்றர் இடைவெளி' (வரிசையில் நபர்களுக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளி விட்டு காத்திருப்பதற்கான) விட்டுத் தரையில் அடையாளங்கள் இடப்பட வேண்டும்.
- பணத்தைக் கையாளுவதைக் குறைக்க சரியான தொகையை வழங்குவதற்கு வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கவும்.
- வாடிக்கையாளர்கள் தங்கள் சொந்த எழுதுகோல்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கவும்.
- பெரிய/மத்திய அஞ்சலகங்களில் உடல்வெப்பநிலைக் கண்காணிப்புக் கட்டமைப்பினை நிறுவுவதுடன் கைகழுவுவதற்கான வசதிகள் (கால்களால்/ முழங்கையினால் இயக்கப்படும் நீர்ஆழியுடன் திரவ சவர்க்காரம்) அல்லது கைதூய்மிப்பான்களை வழங்கும் வசதிகளை ஏற்படுத்துக.

**அறிவுறுத்தும் முறைகள்**

- சகல அஞ்சலகங்களுக்கும் அனுப்பப்பட வேண்டிய அறிவுறுத்தல்கள் அடங்கிய விபரங்களை அஞ்சல் திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அனுப்புதல்.
- சகல அஞ்சலக வாயில்களிலும் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தல்
- சகல அஞ்சற் பணிஞர்களுக்கும் புத்தறிவினை (Orientation) வழங்குதல்.




**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020